# நீங்கள் 65 வயதை எட்டுகிறீர்களா?

**நீங்கள் எப்போது வேண்டுமானாலும் மாதாந்தர வழங்குதொகைகளைப் பெறத் தொடங்கலாம்.**

உங்களுக்கான மாதாந்தர மசேநி வழங்குதொகைகள் பற்றி கவனத்தில் கொள்ளவேண்டிய 5 விவரங்கள்.

## கே1 எனது மாதாந்தர வழங்குதொகைகளை எப்படி தொடங்குவது?



எங்கள் இணையத்தளத்தின்மூலம் எங்களிடம் தெரியப்படுத்துவதே ஆக விரைவான வழி ***(cpf.gov.sg/RSSPayoutForm)***.

நீங்கள் பின்வரும் வழிகளிலும் தொடங்கலாம்:

- ☐ cpf.gov.sg இணையத்தளத்திலிருந்து படிவத்தைப் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்தல்; அல்லது
- ☐ எந்த ஒரு மசேநி சேவை நிலையத்திற்கு வருகையளித்தல்.

## கே2 எனது மாதாந்தர வழங்குதொகைகளை 65 வயதிலிருந்து தானாகத் தொடங்காதது ஏன்?

எல்லா உறுப்பினர்களுமே 65 வயதிலிருந்து வழங்குதொகைகள் பெறத் தொடங்க விரும்புவதில்லை.

தாமதமாகத் தொடங்குவதில் நன்மைகள் உண்டு.

நீங்கள் எங்களிடம் தெரியப்படுத்தியவுடன் வழங்குதொகைகள் பெறத் தொடங்குவீர்கள். உங்களது வருடாந்தர கணக்கு அறிக்கையின்மூலம், நாங்கள் ஒவ்வோர் ஆண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துவோம்.

நீங்கள் 70 வயதுக்குள் எங்களிடம் தெரியப்படுத்தாவிட்டால், நாங்கள் தானாகவே உங்களுடைய வழங்குதொகைகளைத் தொடங்கிவிடுவோம்.

## கே3 எனது மாதாந்தர வழங்குதொகைகள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன?

நீங்கள் வழங்குதொகைப் பெறத் தொடங்கும்போது, உங்களது ஓய்வுக்காலக் கணக்கில் உள்ள சேமிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டுக்கு 4% அடிப்படை வட்டியுடன் உங்களது 85 வயது வரை நீடிக்கும் வகையில் வழங்குதொகை கணக்கிடப்படுகிறது.

அதோடு, உங்களது ஓய்வுக்காலக் கணக்கிலுள்ள சேமிப்புகளுக்கு அரசாங்கம் கூடுதல் வட்டியும் (ஆண்டுக்கு 2% வரை) தருகிறது. உங்களுக்கான வழங்குதொகைகளை 85 வயதுக்கு மேலாக, அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு, நீட்டிப்பதற்கு இந்தக் கூடுதல் வட்டி பயன்படுத்தப்படும்.




## கே4 நான் மாதாந்தர வழங்குதொகைகள் பெறத் தொடங்குவதை ஒத்திப்போடுவதால் எனக்கு என்ன நன்மைகள் கிடைக்கும்?

நீங்கள் மாதாந்தர வழங்குதொகைகளைப் பிற்பாடு பெறத் தொடங்கினால், கூடுதல் வட்டி ஈட்டுவீர்கள். அதோடு, உங்களது மாதாந்தர வழங்குதொகையும் பொதுவாக அதிகமாக இருக்கும்.*

நீங்கள் ஒத்திப்போடும் ஒவ்வோர் ஆண்டுக்கும், உங்களது மசேநி சேமிப்புகளுக்கு 6% வரையிலான வட்டி கிடைக்கும்.




உங்களது மசேநி சேமிப்புகளுக்கு

* நீங்கள் 85 வயதை எட்டுவதற்குள் வழங்குதொகைகள் முடிவடையும் நிலை மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

## கே5 நான் வாழ்நாள் முழுவதும் மாதாந்தர வழங்குதொகைகளைப் பெறுவது எப்படி?

80 வயதுக்கு முன்பு எப்போது வேண்டுமானாலும் மசேநி லைஃப் திட்டத்தில் சேர்ந்து, வாழ்நாள் முழுவதும் மாதாந்தர வழங்குதொகைகள் பெறுங்கள்.




## இன்னும் கேள்விகள் உண்டா?

**cpf.gov.sg/writetous வழி எழுதுங்கள், அல்லது 1800 227 1188 அழையுங்கள்**

CENTRAL PROVIDENT FUND BOARD SINGAPORE